ஆ.அண்ணாதுரை, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்,
விழுப்புரம் மாவட்டம்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பெருந்திட்ட வளாகம்
விழுப்புரம் - 605 602.
தமிழ்நாடு.
தொலைபேசி : அலுவலகம் : 04146-222450
இல்லம் : 222480
நிகரி : 222470
e-mail : collrvpm@nic.in

**ந.மு.க.ஆ10/2450/2019** **நாள்:13.01.2020**

அன்பார்ந்த அய்யா,

பொருள்: கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் - தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் - விழுப்புரம் மாவட்டம் - மரக்காணம் வட்டம் - கூனிமேடு கிராமம் - புல எண்.94/2-ல் 16.00.0 ஹெக்டேர் இடத்தில் கடல்நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் - உத்தேச நிலம் வனத்துறையின் நடவடிக்கையிலிருந்து மீளப்பெற மாற்று நிலம் வழங்குவது - தொடர்பு.

பார்வை:

1.நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம், சென்னை அவர்களின் நேர்முக கடித எண்.Desalination plant / VPM District / AE1 / PDC / 2017, Dated: 15.07.2019, 13.09.2019 and 18.09.2019.

2.மேலாண்மை இயக்குநரின் ஆய்வு கூட்டறிக்கை எண்.Land Issue/AE7/PDC/2019, Dated: 23.09.2019.

3.இவ்வலுவலக கடித ந.க.எண்.ஆ10/2450/2019, நாள்:01.10.2019.

4.விழுப்புரம் மாவட்ட வன அலுவலர் கடித எண்.C.No.10309/2019/D1, நாள்:14.10.2019.

5.கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் அவர்களின் கடித எண்.D1/8264/2019, நாள்:31.10.2019.

6.மேலாண்மை இயக்குநர் அவர்களின் நேர்முக கடித எண்.Desal Plant / VPM Dt / AE 1 /PDC /2019, Dt:22.11.2019.

7.இவ்வலுவலக ந.மு.க.எண்.ஆ10/2450/2019, நாள்:12.12.2019 மற்றும் 18.12.2019

******

பார்வையில் காணும் கடிதங்களின்பால் தங்களின் மேலான பார்வையினை கொணர விழைகிறேன்.

Scanned by CamScanner

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், கூனிமேடு கிராம புல எண்.94/2-ல் 51.68.5 ஹெக்டேரில் 16.00.0 ஹெக்டேரில் கடல்நீரை குடிநீராக்கும் திட்டப்பணிகள் மேற்கொள்ள உத்தேசித்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு நிலமாற்றம் செய்ய பார்வை 1-ல் காணும் கடிதங்களில் கோரப்பட்டுள்ளது. மேலும், மேற்படி புல எண்.94/2-ல் 51.68.5 ஹெக்டேர் நிலமும் வனத்துறைக்கு வழங்கிட பரிந்துரை செய்யப்பட்டு முன்மொழிவு அறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் இருப்பினும், மேற்படி நிலம் குடிநீர் சுத்திகரிப்பு திட்டம் செயல்படுத்த பொருத்தமான நிலமாக உள்ளதால் மேற்படி 16.00.0 ஹெக்டேர் பரப்பினை வனத்துறைக்கு வழங்குவதிலிருந்து விலக்கு பெற்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு நிலமாற்றம் செய்துதர கோரப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் இவ்வலுவலக கடிதத்தில் கடல்நீரை குடிநீராக்கும் திட்ட பணிகளுக்கு புல எண்.94/2-ல் 16.00.0 ஹெக்டேர் நிலம் அவசியம் தேவைப்படுவதால் விழுப்புரம் மாவட்ட வன அலுவலரின் கருத்துரு கோரப்பட்டதில் பார்வை 4-ல் காணும் மாவட்ட வன அலுவலர் அவர்களின் கடிதம் மற்றும் பார்வை 5-ல் காணும் .கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் அவர்களின் கடிதத்திலும் கூனிமேடு கிராம புல எண்.94/2-ல் 51.68.5 ஹெக்டேர் நிலம் வனத்துறைக்கு வழங்கிட உத்தேசிக்கப்பட்டு தமிழ்நாடு வனச்சட்டம் 1882 பிரிவு 16-ன் கீழான அறிவிக்கை செய்திட முன்மொழிவுகள் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், மேற்படி நிலத்தில் தேவைப்படும் பகுதிகளை மீளப்பெற தமிழ்நாடு வனச்சட்டம் 1980 பிரிவு 2 (Conservation)-ன் கீழ் ஆன்லைனில் விண்ணப்பம் செய்து பின்னர் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும், விலக்கு பெற 16.00.0 ஹெக்டேர் பரப்பளவிற்கு இரு மடங்கு பரப்பிலான நிலம் வனத்துறைக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து 07.12.2019 அன்று மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் கூடுதல் ஆட்சியர் (வருவாய்) அவர்களுடன் நடத்திய கலந்தாலோசனையின் போது தெரிவிக்கப்பட்டதில் மேற்படி புல எண்.94/2-ல் 16.00.0 ஹெக்டேர் நிலம் இத்திட்டத்திற்கு பொருத்தமானதாக உள்ளதால் அந்நிலத்தினை மீளப்பெற தமிழ்நாடு வனச்சட்டம் 1980-ன்படி ஆன்லைனில் விண்ணப்பம் செய்து நடைமுறைகள் பின்பற்றவும் மேலும் பெறப்படும் 16.00.0 ஹெக்டேர் நிலத்திற்கு மாற்றாக இரு மடங்கு நிலத்தினை வனத்துறைக்கு வழங்கிட மாற்று நிலம் கண்டறியவும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அவர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டதன் பேரில் பார்வை 7-ல் காணும் இவ்வலுவலக நேர்முக கடிதங்கள் அனுப்பப்பட்டது.

Scanned by CamScanner

மேற்படி கடிதத்தில் வனத்துறையிடமிருந்து மீளப்பெறும் 40 ஏக்கர் நிலங்களுக்கு மாற்று நிலம் வழங்க விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம் கட்டளை கிராமத்தில் 9 புல எண்களில் மொத்த பரப்பளவு 52.88 ஏக்கர் மற்றும் வானூர் வட்டத்தில் காரட்டை கிராமத்தில் 13 புல எண்களில் 27.30 ஏக்கர் பரப்பளவிலான நிலங்கள் கண்டறியப்பட்டு தெரிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து முன்மொழிவு அறிக்கைகள் தயார் செய்யும் நடவடிக்கைகளின்போது ஏற்கனவே பரிந்துரை செய்யப்பட்ட காரட்டை கிராம புல எண்களில் ஆக்கிரமிப்புதாரர்கள் ஆக்கிரமிப்பு செய்து நெற்பயிர் செய்து வரும் விபரம் தெரியவருவதால் ஆக்கிரமிப்பற்ற கீழ்காணும் நிலங்கள் மீள கண்டறியப்பட்டு புலப்பார்வையிட்டு அதன் விபரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

மாவட்டம்: விழுப்புரம் வட்டம்: திண்டிவனம் கிராமம்: கட்டளை

வனத்துறைக்கு நிலமாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள பகுதி விபரம்.

| வ.எண் | புல எண் | வகைபாடு | மொத்த பரப்பு ஹெக்.ஏர்ஸ் | நிலமாற்றம் செய்யவுள்ள பரப்பு | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 5/1 | அ.புஞ்சை | 0.08.5 | 0.08.5 | தரிசு |
| 2 | 5/2 | அ.தரிசு | 5.34.0 | 5.34.0 | கல்லாங்குத்து |
| 3 | 5/3 | அ.புஞ்சை | 0.04.5 | 0.04.5 | தரிசு |
| 4 | 7/1 | அ.தரிசு | 1.62.0 | 1.62.0 | கல்லாங்குத்து |
| 5 | 8/1 | அ.தரிசு | 2.88.0 | 2.88.0 | கல்லாங்குத்து |
| 6 | 8/2 | அ.புஞ்சை | 0.16.0 | 0.16.0 | தரிசு |
| 7 | 12 | அ.தரிசு | 8.03.0 | 8.03.0 | கல்லாங்குத்து |
| 8 | 36/1 | அ.புஞ்சை | 1.05.0 | 1.05.0 | தரிசு |
| 9 | 37/1 | அ.தரிசு | 2.20.5 | 2.20.5 | கல்லாங்குத்து |
| | | மொத்தம் | 21.41.5 | 21.41.5 (அ) 52.89 ஏக்கர் | |

மாவட்டம்: விழுப்புரம் வட்டம்: வானூர் கிராமம்: 17 காரட்டை

வனத்துறைக்கு நிலமாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள பகுதி விபரம்.

| வ.எண் | புல எண் | வகைபாடு | மொத்த பரப்பு ஹெக்.ஏர்ஸ் | நிலமாற்றம் செய்யவுள்ள பரப்பு (உட்பிரிவுக்கு பின்) | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 107 | அ.புஞ்சை | 1.75.0 | 107/2 | 0.90.0 | தரிசு |
| 2 | 108 | அ.புஞ்சை | 1.61.5 | 108 | 1.61.5 | தரிசு |
| 3 | 109/1 | அ.புஞ்சை | 0.12.0 | 109/1 | 0.12.0 | தரிசு |
| 4 | 109/2 | அ.புஞ்சை | 1.49.0 | 109/2 | 1.49.0 | தரிசு |
| 5 | 110/1 | வாய்க்கால் புறம்போக்கு | 0.12.0 | 110/3 | 0.06.5 | வாய்க்கால் |

Scanned by CamScanner

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6 | 110/2 | அ.புஞ்சை | 2.09.5 | 110/4 | 1.06.0 | தரிசு |
| 7 | 119 | அ.புஞ்சை | 0.43.5 | 119 | 0.43.5 | தரிசு |
| 8 | 120/1 | வாய்க்கால் புறம்போக்கு | 0.08.5 | 120/1 | 0.08.5 | வாய்க்கால் |
| 9 | 120/2 | அ.புஞ்சை | 0.70.5 | 120/2 | 0.70.5 | தரிசு |
| 10 | 127 | அ.புஞ்சை | 0.53.5 | 127 | 0.53.5 | தரிசு |
| 11 | 128/1 | வாய்க்கால் புறம்போக்கு | 0.07.5 | 128/3 | 0.03.0 | வாய்க்கால் |
| 12 | 128/2 | அ.புஞ்சை | 1.70.5 | 128/4 | 0.72.0 | தரிசு |
| 13 | 135/- | அ.புஞ்சை | 2.13.5 | 135/2 | 1.10.5 | தரிசு |
| 14 | 136/1 | வாய்க்கால் புறம்போக்கு | 0.07.5 | 136/1 | 0.07.5 | வாய்க்கால் |
| 15 | 136/2 | அ.புஞ்சை | 2.11.5 | 136/2 | 2.11.5 | தரிசு |
| | | மொத்தம் | 15.05.5 | | 11.05.5 (அ) 27.31 ஏக்கர் | |

வானூர் வட்டம், காரட்டை கிராமத்தில் நில மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள புலங்களை மாவட்ட ஆட்சியர், கூடுதல் ஆட்சியர் (வருவாய்) , வருவாய் கோட்டாட்சியர், மாவட்ட வன அலுவலர் மற்றும் வருவாய் வட்டாட்சியர் ஆகியோர் கூட்டுப்புலத்தணிக்கை செய்த போது சில புலங்களில் ஆக்கிரமிப்புகள் இருந்ததால், அவற்றை தவிர்த்து மேற்குறிப்பிட்டுள்ள புலங்கள் நிலமாற்றம் செய்ய தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே இத்திருத்தப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள நில விவரங்களின் அடிப்படையில் கடல்நீரை குடிநீராக்கும் திட்டப்பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள கூனிமேடு கிராமம் புல எண்.94/2-ன் மொத்தப் பரப்பளவில் தேவைப்படும் 16.00.0 ஹெக்டேர் நிலத்தினை வனத்துறையின் நடவடிக்கைகளிலிருந்து மீளப்பெற, வனத்துறைக்கு ஈடாக வழங்க வேண்டிய 80 ஏக்கர் நிலத்திற்கு மேற்காணும் விபரம் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ள திண்டிவனம் வட்டம் கட்டளை கிராமத்தில் 9 புலஎண்கள் மற்றும் வானூர் வட்டம் காரட்டை கிராமத்தில் 15 புல எண்களையும் மாற்று நிலங்களாக பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மாற்றாக வழங்கப்படவுள்ள 80 ஏக்கர் நிலத்தினை வனத்துறைக்கு வழங்கிட முறையான முன்மொழிவு கூடுதல் தலைமைச் செயலாளர் / நில நிர்வாக ஆணையர் மூலம் அரசிற்கு சமர்ப்பிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் விழுப்புரம் மக்களின் குடிநீர் தேவையினை நிறைவு செய்யவும் கடல்நீரை குடிநீராக்கும் திட்டப்பணிகளுக்கு மேற்படி புல எண்.94/2 பொருத்தமானதாக தெரிவிக்கப்படுவதால் இதை தவிர வேறு பொருத்தமான நிலம் காணப்படாததால் 94/2இல் மீளப்பெறும் 16.00.0 ஹெக்டேர் நிலத்திற்கு இருமடங்கு பரப்புள்ள நிலத்தினை வனத்துறைக்கு வழங்கிட உத்தேசித்துள்ளதால் கட்டளை

Scanned by CamScanner

கிராமத்தில் - 21.41.5 ஹெக்டேர் மற்றும் காரட்டை கிராமத்தில் - 11.05.5 ஹெக்டேர் ஆக மொத்தம் 32.47.0 ஹெக்டேர் அல்லது 80.20 ஏக்கர் நிலங்களை வனத்துறைக்கு மாற்று நிலமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதால் கூனிமேடு கிராம புல எண்.94/2-ல் 16.00.0 ஹெக்டேர் நிலத்தினை வனத்துறையிடமிருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு பெற்றிட மேற்படி தமிழ்நாடு வனச்சட்டம் 1980 (Conservation) பிரிவு 2-ன் கீழ் ஆன்லைனில் விண்ணப்பம் செய்து கொள்ளலாம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>இணைப்பு</u>

பட்டியலில் காண்பிக்கப்பட்டுள்ள
ஈடான நிலங்களுக்குரிய

1. அ -பதிவேடு நகல்,
2. அடங்கல் நகல்,
3. புலப்பட நகல்.

தங்கள் அன்புள்ள,

(ஆ.அண்ணாதுரை)

பெறுநர்

முனைவர்.சி.நா.மகேஸ்வரன், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம்,
சென்னை.

நகல்

1.கண்காணிப்பு பொறியாளர் (பொ),
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்,
கடலூர்.

2.மாவட்ட வன அலுவலர்,
விழுப்புரம்.

Scanned by CamScanner